THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 5th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

லாடபுரம் அருகில் ஏரி கட்டுதல்

* 127 *கேள்வி.*—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பெரம்பலூர் தாலுகாவில் லாடபுரம் அருகில் ஏரி கட்டுவதற்காக செய்யப்பட்ட சர்வேயின்மீது எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

THE HON. SRI P. KAKKAN: The proposal for the formation of a tank near Ladapuram in Perambalur taluk is under investigation. The soil samples have been sent for laboratory test regarding their suitability for formation of tank bund.

The proposals will be considered as soon as they are finalized by the Chief Engineer (Irrigation) and the Board of Revenue and submitted to Government.

திரு. து. ப. அழகமுத்து: அதிகப்படியான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியாக இந்த வேலை விரைவில் துவக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் கரையைப்போடுவது என்பது அங்குள்ள மண் தகுதியைப் பொறுத்து இருக்கிறது. அதைப் பற்றி சீப் இஞ்சினியரைக் கேட்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி போர்டு ஆப் ரெவின்யூவும் பரிசீலனை செய்துவருகிறார்கள். அவர்கள்தான் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்கப்பட்டு ரிபோர்ட் வந்த பிறகுதான் அரசாங்கம் அதைப்பற்றி முடிவு எடுக்கும்.

ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்

* 128 *கேள்வி.*—**திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் ஒரு ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் (Senior and Junior Basic Training School) ஆரம்பிப்பதற்கு ஆற்காடு லூதரன் சபையின் காரியதரிசியிடமிருந்து விண்ணப்பம் ஏதாவது வந்துள்ளதா?